# ஏப்ரல்- 08 - இறை இரக்கத்தின் ஞாயிறு

**“நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்” (யோவா.20:28)**

## முதல் வாசகம் :திருத்தூதர் பணிகள்4: 32 – 35

அக்காலத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது.திருத்தூதர் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்து வந்தனர். அவர்கள் அனைவரும் மக்களின் நல்லெண்ணத்தை மிகுதியாகப் பெற்றிருந்தனர்.தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. நிலபுலன்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று அந்தத் தொகையைக் கொண்டு வந்துதிருத்தூதருடைய காலடியில் வைப்பர் அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில்
என்றும் உள்ளது அவரது பேரன்பு.

## இரண்டாம் வாசகம் : 1 யோவான் 5 : 1 - 6

சகோதர சகோதரிகளே இயேசுதான் மெசியா என்று நம்புவோர் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். பெற்றவரிடம் அன்பு செலுத்துவோர் பிள்ளைகளிடமும் அன்பு செலுத்துவர். நாம் கடவுள்மீது அன்புகொண்டு அவர் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது, கடவுளின் பிள்ளைகள்மீதும் அன்பு கொள்கிறோம் என்பது நமக்குத் தெரியவரும். ஏனெனில் அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில்தான் கடவுள் அன்பு அடங்கியுள்ளது. அவர் கட்டளைகள் நமக்குச் சுமையாய் இருப்பதில்லை. ஏனெனில் கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும் உலகை வெல்லுவது நம் நம்பிக்கையே. இயேசு இறைமகன் என்று நம்புவோரைத் தவிர உலகை வெல்வோர் யார்? நீராலும் இரத்தத்தாலும் வந்தவர் இயேசு கிறிஸ்து. அவர் நீரால் மட்டும் அல்ல. நீராலும் இரத்தத்தாலும் வந்தவரென தூய ஆவியார் சான்று பகர்கிறார். தூய ஆவியாரே உண்மை.

## நற்செய்தி : யோவான் 20 : 19 – 31

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்பகிறேன்” என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள்மேல் ஊதி, ”தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா” என்றார். பன்னிருவருள் ஒருவரான திதிம் என்னும் தோமா, இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், ”ஆண்டவரைக் கண்டோம்” என்றார்கள். தோமா அவர்களிடம், ”அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்” என்றார். எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், ”இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்” என்றார். தோமா அவரைப் பார்த்து, ”நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!” என்றார். இயேசு அவரிடம், ”நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்றார். வேறு பல அரும் அடையாளங்களையும் இயேசு தம் சீடர்கள் முன்னிலையில் செய்தார். அவையெல்லாம் இந்நூலில் எழுதப்பட வில்லை. இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன.

**தியானம்:** வாழ்க்கை என்பது போராட்டம் அதை போராடிதான் ஜெயிக்க வேண்டும் என்பது உலக சித்தாந்தம். ஆனால் கடவுள் நம்மைப் படைத்து உலகத்திற்கு அனுப்பி வைத்தது, பிரச்சனைகளில் உழன்று, துன்பங்கள் அனுபவித்து, வாழ்க்கையை நொந்து கொண்டு அழிந்துபோவதற்காக அல்ல, மாறாக இறைவனுடைய உயிர்ப்பின் பிரசன்னத்தைச் சுமந்து இந்த உலகத்தை ஜெயித்து கடவுளின் வல்லமையால் இந்த உலகத்தை ஆள்வதற்காக. இந்த உலகத்தை நாம் ஜெயிக்க வேண்டும் என்றால் நாம் கடவுளிடமிருந்து பிறக்க வேண்டும். “கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும்’’ (1யோவா 5:4). கடவுளிடமிருந்து பிறக்க வேண்டும் என்றால் தொடக்ககால திருச்சபையைப் போன்று ஆண்டவருடைய பாதத்தில் நாம் அமர கற்றுக்கொள்ள வேண்டும். இயேசு தன் சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்தது போன்று ஒவ்வொருநாளும் இயேசு கருக்கலில் எழுந்து தனிமையான இடத்துக்குச் சென்று தந்தையோடு தான் கொண்ட உறவை புதுப்பித்துக் கொண்டு அவருடைய ஏக்கம் என்ன? என்னுடைய விருப்பம் அல்ல மாறாக என்னை அனுப்பியவரின் திருவுளம் என்ன? அவர் என்னிடம் எதிர்பார்ப்பது என்ன? நான் யாருக்குச் சொந்தம்? என்பது போன்ற சுய ஆய்வினை ஜெபத்தில் இயேசு ஆய்ந்தறிந்து தன்னுடைய எண்ணங்களை, விருப்பங்களை, திட்டங்களை கடவுளிடமிருந்து பிறக்க வைத்தாரோ, அதே போல் தொடக்ககால திருச்சபையும் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்ததால் (தி.ப.2:42) கடவுளின் ஏக்கங்களை தங்கள் வாழ்க்கையில் உணர்ந்து அதற்கேற்றாற்போல் தங்கள் வாழ்வை அமைத்துக்கொண்டு (தி.ப.4:32-35) வெற்றி வாழ்க்கையை வாழ்ந்தார்கள். நாமும் அப்படிப்பட்ட வெற்றி வாழ்க்கையை வாழ வேண்டுமென்றால் கடவுளிடமிருந்து நாமும், நமது எண்ணங்களும், நமது வாழ்வும் பிறக்க வேண்டும். கடவுளிடமிருந்து பிறக்க முதல்படி இயேசுவின்மீது நாம் கொள்ளும் நம்பிக்கை. இயேசு கடவுளால் அனுப்பப்பட்ட இறைமகன் நமக்கெல்லாம் முன்னோடி என்பதை நமது உள்ளத்தில் உணர வேண்டும். அதனை ஆழமாக விசுவசிக்க வேண்டும். இயேசு இறைமகன் என்று நம்புவோரைத் தவிர உலகை வெல்வோர் யார்? (1யோவா.5:5). இயேசு இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார். வாழ்பவரும் நானே, இறந்தேன் ஆயினும் இதோ என்றென்றும் வாழ்கின்றேன். (தி.வெ.1:18) இயேசுவின் மீது நாம் அசையாத நம்பிக்கை வைத்து அவருடைய விழுமியங்களை நமதாக மாற்றி வாழும்போது இன்றும் இயேசு உயிரோடு வாழ்கின்றார் நம்முடைய வாழ்க்கையின் வாயிலாக.